2006 ஜனவரி 19]

இந்த நிதியாண்டிலேயே பரிசீலித்து சுற்றுச்சுவர் கட்டுவதற்கு உண்டான முயற்சிகள் எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 53, திரு. சி. சண்முகம், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.*

53—

சுற்றுச்சூழல்

*** 7315—திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை புறநகர் பகுதிகளில் செங்கல் தொழிற்சாலையின் புகையினால் சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) சென்னை புறநகர் பகுதியில் செங்கல் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகையினால் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க சேம்பர் செங்கல் தொழிற்சாலைகளில் விறகு, மரக்கரி மற்றும் நிலக்கரி போன்ற எரிபொருட்களைக் காற்றுடன் தகுந்த விகிதத்தில்...

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினருடைய துணைக் கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்லுகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: கலந்து எரிக்க வேண்டும் எனவும், நகரக்கூடிய புகை போக்கிக்குப் பதிலாக நிலையான புகைபோக்கியைப் பொருத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் 250-க்கு மேல் செங்கல் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் அமைச்சர் அவர்கள் கூறியபடி, மாசுபடுவதைத்

தடுக்க இதுவரை எந்தவித ஏற்பாடும் செய்யவில்லை. நிலக்கரியையே – மாசுபடும் நிலக்கரியையே — உபயோகப்படுத்தி வருகிறார்கள் என்பதையும், அடுத்து இந்தத் தொகுதியில் உள்ள 250 செங்கல் தொழிற்சாலைகளிலுள்ள நிலங்கள் அனைத்தும் அரசு விதிப்படி, கனிம விதிப்படி 5 அடிதான் எடுக்க வேண்டும்; 15 அடிக்குமேல் ஆழம் எடுத்து நன்றாக ஆழப்படுத்தி விட்டார்கள் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அங்கு மாசு ஏற்படுவதைத் தடுக்க மாசுக் கட்டுப்பாடு வாரியம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) நேற்றே பதில் சொல்லிவிட்டேன். மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்)

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன். (குறுக்கீடுகள்)